## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

பண்டாரவளை மா நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

மா நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்று தெரிவித்திருக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் மறுப்பு அபிப்பிராயம் ஒன்றினை வெளியிடுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஊழியர் கடன் அட்டவணையின் படி மீதி ரூபா 40,465,071 தொகை காணப்பட்ட போதிலும் அது நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 39,162,625 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 1,302,446 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த மற்றும் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த சில ஊழியர்களின் கடன் மீதிகள் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு முடியாமல் போனதென குறிப்பிடப்பட்டுள்ளது. | |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 13,879,382 தொகை எனினும் நிதிச் செயற்பாட்டுக் கூற்றில் ரூபா 11,664,133 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 2,215,249 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிதியம் அப் பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | ரூபா 13,879,382 இற்கான மீதி சரியானது என குறிப்பிடப்பட்டுள்ளது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் பொதுப் பேரேட்டில் ஆரம்ப மீதி பதிவு செய்யும் போது ரூபா 60,832,925 பெறுமதியான 34 நிலுவை வருமான மீதிகளை கணக்கீடு செய்யப்பட்டிருக்காமையால் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்கள் குறைவாகவும் மற்றும் அப் பெறுமதியினால் திரண்ட நிதியம் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது. | பரிசோதனை செய்து 2022 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய முன்னைய ஆண்டுகளின் போது கிடைத்திருந்த 14 வருமானமக் கணக்குகளுக்காக கிடைத்திருந்த ரூபா 153,224 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருக்காமையால், அத் தொகையினால் செயற்பாட்டு வருமானம் குறைவாகவும், நடைமுறைப் பொறுப்புக்கள் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது. | ரூபா 10,793,809 இற்கான தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலைகள் உட்பட தீர்க்கப்படாத முற்பணங்கள் எனவும், ரூபா 30,978,836 இற்கான தொகை தீர்க்கப்படாத முற்பணங்கள் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முற்பணப் பதிவேட்டின் படி தீர்க்கப்பட்டு இருக்காத முற்பண மீதி ரூபா 10,793,807 தொகை எனினும், நிதி நிலைமைக் கூற்றில் பெற வேண்டியவற்றில் முற்பணம் என ரூபா 30,978,836 தொகை காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 20,185,029 தொகை மிகையாவும் அதே பெறுமதியினால் திரண்ட நிதியம் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக நடைமுறைக் கணக்கில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 10,000,000 இற்கான தொகைக்குரிய இரட்டைப் பதிவுக்குப் பதிலாக முற்பணக் | நாட்குறிப்பின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. | |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கில் மாத்திரம் வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த கணக்கு சமப்படுத்தப்பட்டிருந்தமை சச்சரவுத் தன்மையாகக் காணப்பட்டது. | | |
| (எ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அட்டவணைகளின் படி நிலுவை ஏனைய வருமான மீதி ரூபா 23,510,627 தொகை எனினும், அவை ரூபா 124,569,537 தொகை என ரூபா 101,058,910 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தமையால் நிதி நிலைமைக் கூற்றில் பெற வேண்டியவைகள் மற்றும் திரண்ட நிதியம் அப் பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | பரிசோதனைகள் மேற்கொண்டு 2022 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | சரியாக கணக்குகள தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 889,270 தொகை எனினும், அதனை ரூபா 465,213 தொகை என ரூபா 424,057 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தமையால் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிதியம் அந்தத் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | நீதிமன்றத் தண்டப்பண வருமானப் பதிவேடு தாமதமாக கிடைப்பதினால் 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ஐ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 10,229,445 தொகை எனினும் அதனை ரூபா 3,832,117 தொகை என ரூபா 6,397,328 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தமையால் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை சொத்துக்கள் மற்றும் திரண்ட நிதியம் அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கிடைக்கப்பட்டிருந்த அட்டவணைகளின் படி மீதிகள் உட்படுத்தப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ஒ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மா நகர சபையினால் அரச வங்கி ஒன்றில் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 2,641,286 இற்கான தொகை தொடர்பாக நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் | தவறுதலாக கணக்கு மீதி நிதிக் கூற்றுக்களில் உட்படுத்த முடியாமல் போனது எனவும் மற்றும் 2022 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

காட்டபட்டிருக்காமையால் அப் பெறுமதியினால் நடைமுறைச் சொத்துக்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் போது ரூபா 1,808,345 இற்கான நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் 07 மீதிகள் மற்றும் கடன்கொடுத்தோர் என இனங்கண்டிருக்காமையால், செயற்பாட்டு வருமானம் மிகையாகவும் நடைமுறைப் பொறுப்புக்கள் குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 77,072,525 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | குறிப்பிட்ட சீராக்கல்கள் மேற்கொண்டு சரியான மீதிகள் சமர்ப்பிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 39,020,666 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 19,567,571 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆண்டு முதல் காணப்படும் 15 வாகனங்களின் நிலுவை அனுமதிப் பத்திரக் கட்டணம் ரூபா 479,800 தொகை மற்றும் 25 நடமாடும் லொறி வண்டிகளுக்கான கட்டணம் ரூபா 272,500 தொகையினை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2016 ஆண்டு முதல் காணப்படுகின்ற 9235 தனியார் வீதவரி அலகுகளுக்குரிய நிலுவை வீதவரி ரூபா 11,664,133 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்திருக்கவில்லை. | | |
| (இ) 2016 ஆண்டு முதல் காணப்படுகின்ற நிலுவை வாராந்த சந்தைக் கட்டணம் ரூபா 1,166,094 தொகை மற்றும் நிலுவை பொது கழிவறைக் கட்டணம் ரூபா 1,846,047 தொகையினை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்யப்படவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) 2012 ஆண்டு முதல் காணப்படுகின்ற 427 கடையறைகளின் நிலுவை கடை வாடகை ரூபா 6,187,235 தொகை மற்றும் 37 கடைகள் அறைகளின் நிலுவை வருடாந்த குத்தகை ரூபா 9,162,596 தொகை மீளாய்வாண்டின் போது அறவீடு செய்திருக்கவில்லை. | | |
| (உ) 2012 முதல் 2021 வரையான 07 வருட காலப்பகுதியில் மா நகர சபையினால் வருடாந்தம் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த கோழி இறைச்சி, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, மீன் கடை மற்றும் சந்தைகள் ஆகிய 29 ஆதனங்களுக்காக இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு செப்தெம்பர் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 10,281,728 இற்கான நிலுவை வாடகை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை குத்தகை தொடர்பாக இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் மீதித் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலுவைக் குத்தகை அறவீடு செய்ய வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டு திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2004 ஆம் ஆண்டின் போது நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புச் செயற்திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஒப்பந்த நிறுவனம் ஒன்றுடன் அணுகியிருந்த உடன்படிக்கைக்கு மா நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சாக்கடை மற்றும் மழைநீர் வடிகால் முறைமை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 4,403,970 இற்கான கடன்தொகை ஒன்று உள்நாட்டுக் கடன் | சாக்கடை வடிகாலமைப்பு முறைமை உரிய முறையில் செயற்படாமையால் கடன் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை | செயற்திட்ட மேற்பார்வைக்கு நியமனம் செய்யப்பட்டிருந்த குழுவின் பரிந்துரையின் படி செயற்பட வேண்டியதுடன் கடன் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தும் படி அறிவித்து மா நகர சபைக்கு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டு இருந்தது. செயற்திட்டத்தின் மூலம் முறைசார் விதமாக நீர் வடிந்தோடல் மேற்கொள்ளப்படாமையால் மா நகர சபையினால் உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தவணை மற்றும் வட்டி கொடுப்பனவை நிறுத்தப்பட வேண்டும் என 2006 நவம்பர் 24 திகதி பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. சபையினால் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த கடன் தவணை மற்றும் வட்டி ரூபா 7,164,366 தொகையாக இருந்தது. | எடுக்கவில்லை எனவும் அது தொடர்பாக உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்தை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என குறிப்பிடப்பட்டிருந்தது. | மற்றும் வட்டியை செலுத்த வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டின் போது பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் ரூபா 6,390,000 தொகைக்கு கப் வண்டி ஒன்று மா நகர சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த ஆண்டின் போதே கப் வண்டி விபத்துக்குள்ளாகி இருந்ததுடன், திருத்த வேலை மேற்கொள்வதற்காக உள்நாட்டு முகவர் நிலையம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்ட பின்னர் ரூபா 6,354,490 இற்கான திருத்த வேலைக்கான மதிப்பீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த கராஜ் ஒன்றின் மூலம் திருத்த வேலை மேற்கொள்வதற்கும் அந்த திருத்த வேலையின் பின்னர் செலுத்த வேண்டிய தொகையை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் மூலம் தீர்த்துக் கொள்வதற்கும் குழுவின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இந்த கப் வண்டிக்கு ஏற்பட்டிருந்த சேதம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 105(2) இன் பிரகாரம் நட்டங்கள் சேதங்களுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை தீர்மானிப்பதற்கு மற்றும் அறவிடப்பட வேண்டிய உச்சமட்ட பெறுமதியை தீர்மானித்தும் இருக்கவில்லை. விபத்து ஏற்பட்டு 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2021 ஒக்தேபார் 12 திகதி வரை காப்புறுதி நட்டஈடு அறவீடு செய்யப்பட்டு இருக்காததுடன், காப்புறுதிக் கம்பனியினால் ரூபா 2,200,000 தொகை மாத்திரம் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தமையால் குறிப்பிட்ட வாகன விபத்தின் மூலம் பண்டாரவள மா நகர சபைக்கு ரூபா 4,184,491 இற்கான நட்டம் ஒன்று மேற்கொள்ள நேரிட்டிருந்தது. | கப் வண்டியின் திருத்த வேலைக்காக தனியார் கராஜ் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும், வாகனத்தின் விபத்து தொடர்பாக நி.பி. 104 பிரகாரம் ஆரம்ப அறிக்கை உள்ளூராட்சி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் இறுதி அறிக்கை இது வரை கிடைத்திருக்கவில்லை எனவும் குறிப்பிடப்பட்டு இருந்தது. | காப்புறுதி நட்டஈடு அறவீடு செய்து நி.பி. 105(2) பிரகாரம் நட்டங்கள் சேதங்களுக்கு பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பண்டாரவளை மாநகர சபைக்குச் சொந்தமான மொத்த மற்றும் சில்லறை சந்தையின் 2020 ஆண்டிற்கான கட்டணம் அறவீடு செய்யும் உரிமையை குத்தகைக்கு கொடுப்பதற்காக விலைகூறல்தாரர்கள் அழைப்பின் போது 2019 ஆண்டின் இறுதி 10 நாட்கள் வரை தாமதப்படுத்தி பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.2.2 பந்தியில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக சென்று விலைகூறல் அழைத்தல் 06 நாட்களுக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. அதற்கு 03 நாட்களுக்கு பின்னர் விலைகூறல் படிவம் வழங்கியதன் மூலம் விலைகூறல் தாரர்களினால் நிறைவேற்றப்பட வேண்டும் என விதிக்கப்பட்டிருந்த விஷேட நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்காக போதியளவு கால அவகாசம் காணப்படாமை மற்றும் அதற்காக நியாயமான காலம் ஒன்று வழங்கும் படி கோரியிருந்த போதிலும் அது தொடர்பாக பெறுகை குழு கவனம் செலுத்தியிருக்கவில்லை. விலைகூறல் தாரர்களுக்கு அவர்களின் சொத்துக்களின் உரிமை தொடர்பான சான்றிதழ் சமர்ப்பிப்பதற்கு இயலாமல் போதல் போன்ற மிகவும் சிறிய குறைபாடுகள் மீது மிகவும் கூடிய விலைகூறல் சமர்ப்பித்திருந்த விலைகூறல்தாரர்களின் விலைகூறல்கள் மறுக்கப்பட்டிருத்தல் மற்றும் குறைந்த விலைகூறல் சமர்ப்பித்திருந்த விலைகூறல்தாரர்களின் விலைகூறல்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தமையால் பண்டாரவளை மாநகர சபைக்கு ரூபா 8,290,000 இற்கான நிதிசார் நட்டம் ஒன்று மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது. | மொத்த மற்றும் சில்லறை சந்தைகள் நீண்டகாலமாக ஒரே நபரினால் குத்தகைக்கு எடுப்பதை தவிர்ப்பதற்காக நிபந்தனைகளை கடுமையாக்கி பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டு கேள்விதாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 229(2) இன் படி ஆளுனரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. | முறைசார் விதமாக கேள்வி நடைமுறை கடைபிடிக்கப்பட்டு ஆதனங்களை குத்தகைக்கு வழங்க வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மா நகர சபை ஒன்றின் வருடாந்த நிதிக்கூற்று தயாரிக்கப்பட்டு மா நகர சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கும் பொறுப்பு கணக்காளருக்கே உரியது எனினும் கணக்காளரினால் 2021 ஆண்டிற்கான பண்டாரவளை மா நகர சபையின் நிதிக்கூற்று தயாரித்தல் விசாரணை உத்தியோகத்தர் இருவருக்கு சாட்டப்பட்டு அந்த கருமத்திற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 61,109 இற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு இருந்தது. அதன்படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் உத்தியோகத்தர் சுகயீன விடுமுறையில் இருந்தமையால், சபையின் வேறு உத்தியோகத்தர் ஒருவர் அதற்காக ஈடுபடுத்த முடியாமல் இருந்ததென குறிப்பிடப்பட்டுள்ளது. | கணக்காளர் ஒருவர் சபையில் கடமையாற்றும் போது விசாரணை உத்தியோகத்தர்கள் மூலம் நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் ஏற்றுக் கொள்ள முடியாது. |

அறிவு மற்றும் அனுபவம் இன்றிய உத்தியோகத்தர் ஒருவர் ஒப்பந்த அடிப்படை மீது கணக்காளர் பதவிக்காக சேர்த்திருத்தல் போலவே அவருக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தியிருத்தல் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஒன்றை காட்டியது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதியமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் PFD/RED/REG/02/CC/01/2021 மற்றும் 2021 மே 10 திகதிய சுற்றறிக்கையின் படி மா நகர சபையின் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு 2022 ஆண்டு பெப்ரவரி 28 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 மார்ச் 30 திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதில் ஒரு மாதகால தாமதம் ஏற்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சுற்றறிக்கை சபையினால் கடைபிடிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2022 பெப்ரவரி 28 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |